பக்கங்கள்: 05

# தீம்புனல்

THEEMPUNAL

மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:65 | 07.02.2024 புதன்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054




# டிப்பர் மீது துப்பாக்கிச் சூடு மூவர் கைது



புத்தூர் பகுதியில் சட்ட விரோத மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் மீது பொலிஸார் இன்று காலை துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு மூவரைக் கைது செய்துள்ளனர்.

பளையிலிருந்து இன்று (07) காலை சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றி வந்த டிப்பர் ரக வாகனம் புத்தூர் பகுதியில் வைத்து பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டது.

வாகனம் மறிக்கப்பட்ட போது பொலிஸாரை உதாசீனம் செய்த சாரதி வேகமாக சென்று புத்தூர் பிரதான வீதி ஊடாக சிறுப்பிட்டி, ஆவரங்கால் உள்ளிட்ட பல பாதைகளின் ஊடாக சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக வேகமாக தப்பிக்க முயற்சி செய்தார். டிப்பரைப் பின்தொடர்ந்து துரத்திய பொலிஸார் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் நடமாட்டம் குறைந்த வீரவாணியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

டீசல், டயர் மீது துப்பாக்கி சன்னங்கள் பாய்ந்ததில் சாரதி உட்பட இருவர் வாகனத்துடன் சேர்ந்து தடம் புரண்டனர். கடமையிலிருந்த காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் அவர்களைக் கைதுசெய்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

தடம் புரண்ட டிப்பரை கனரக வாகனத்தின் உதவியுடன் தூக்கிய பொலிஸார் வீதியில் இருந்த மணலையும் அப்புறப்படுத்தினர். இதன்போது பளைப்பகுதியைச் சேர்ந்த டிப்பர் ரக வாகனத்தின் உரிமையாளர் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவரையும் அவ்விடத்தில் வைத்து காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்து அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## இலங்கைக்குள் நுழைந்த சீனக்கப்பல்



சீனாவின் இயற்கை வள அமைச்சிற்கு சொந்தமான தேர்ட் இன்ஸ்டியுட் ஒவ் ஓசோனோலஜியின் ஜியாங் யாங் கொங் 3 என்ற ஆராய்ச்சிக் கப்பல் இலங்கையின் விசேட பொருளாதார வலயத்திற்குள் காணப்பட்டது என தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையினால் விசேட பொருளாதார வலயத்திற்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட சீனாவின் ஆராய்ச்சிக்கப்பல் தற்போது அந்த பகுதிக்குள் காணப்படுகின்றதாக தகவல்கள் வெளியாகின்றன.

இலங்கைக்குள் நுழைவதற்கு அரசாங்கம் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து அந்தக் கப்பல் மாலைதீவை நோக்கி சென்றது. எனினும் தற்போது அந்தக் கப்பல் இலங்கை கடற்பரப்பிற்குள் பொருளாதார வலயத்திற்குள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## சந்திரிகாவிடம் தலைமைப் பொறுப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவ சபையின் தலைவராக நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் யாப்பு மாற்றம் தொடர்பில் நேற்று (6) இடம்பெற்ற நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் போது எடுக்கப்பட்டதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் திஸர குணசிங்க கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கதிரை சின்னத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கவுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் யாப்பு திருத்தத்தின் பிரகாரம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமைத்துவ சபையில் 25 வீத பிரதிநிதித்துவமும் செயற்குழுவில் 50 வீத அதிகாரமும் கிடைக்கும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் புதிய உறுப்பினர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கட்சியின் பொதுச் செயலாளராக புதிய உறுப்பினரொருவர் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# 423 கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடத்தில் 423 வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ச.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக அவர் குறிப்பிடுகையில்,“கடந்த வருடம் (2023) ஜனவரி மாதம் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சாதாரண நடவடிக்கைகளின் போதும், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் 423 வியாபார மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

காலாவதியான பொருட்கள் விற்பனை, கட்டுப்பாட்டு விலைகளைவிட அதிகூடிய விலைகளில் பொருட்கள் விற்பனை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, பொருட்களின் விலைகளில் மாற்றங்களை செய்து விற்பனை, அனுமதிக்கப்படாத அழகுசாதன பொருட்கள் விற்பனை, நிறை குறைந்த பாண் விற்பனை மற்றும் முத்திரையிடப்படாத இலத்திரனியில் பொருட்கள் விற்பனை என பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடத்தில் நிலுவையாக இருந்த வழக்குகள் உட்பட 433 வழக்குகளுக்கு சட்ட நடவடிக்கைகளின் பின்னர் 3,523,000 ரூபா அளவிலான தொகை அபராதமாக நீதிமன்றால் விதிக்கப்பட்டது. பொதுமக்கள் இது தொடர்பான முறைப்பாடுகளை தங்களுக்கு நேரடியாகவோ அல்லது 1977 என்ற இலக்கத்தின் ஊடாகவோ மேற்கொள்ளலாம்” என தெரிவித்துள்ளார்.

# குஜராத்தில் அநுரகுமார தலைமையிலான குழு

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழு இந்தியப் பயணத்தின் இரண்டாவது நாள் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு பிரதமர் நரேந்திர மோடியின் சொந்தமாநிலமான குஜராத்திற்கு சென்றுள்ளதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தக் குழு குஜராத் முதல்வர் புபேந்திர படேலை சந்தித்து மாநிலத்தில் சில சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறதுஅநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழு இந்தியாவின் முன்னணி சிந்தனைக் குழுவான ‘ஒப்சர்வர் ரிசர்ச் பவுண்டேசன்’ பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

முன்னதாக, இந்தப் பயணத்தின் போது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவுச் செயலர் வினய் மோகன் ஆகியோருடன் பேச்சுவார்த்தையை நடத்தினர்.

கம்யூனிஸ்ட் கட்சியால் ஆளப்படும் இந்திய மாநிலமான கேரளாவுக்கும் அவர்கள் செல்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெப்ரவரி 30 ஆம் திகதி?




அம்பாறை அரசாங்க அலுவலகம் ஒன்றில் செயன்முறை பரீட்சைக்காக பெப்ரவரி 30 ஆம் திகதி வருகை தருமாறு வழங்கப்பட்டுள்ள பற்றுச்சீட்டு சமூகவலைத் தளங்களில் வைரலாகி வருகின்றது.

இந்நிலையில் நம்முடைய இலங்கையில் அதுவும் அம்பாறையில் மட்டும்தான் பெப்ரவரி மாதம் 30 நாட்கள் வருகிறதாக என நெட்டிசன்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அதேவேளை நாட்காட்டியில் லீப் வருடத்தில் மாத்திரம் 29 நாட்கள் வரும் அதுவும் நான்கு வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே வரும். இந்த நிலையில் அம்பாறையில் மட்டும் எங்கிருந்து பெப்ரவரி மாதத்தில் முப்பது நாட்கள் வந்தது எனவும் சமூகவலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# கெஹலியவின் கைது கூறும் செய்தி என்ன?

**இந்த நாட்டின் ஆட்சியாளர்களும் சட்ட அமைப்புகளும் சுகாதார அமைச்சும், சர்ச்சைக்குரிய மருந்துப் போதைப்பொருள் ஊழல் தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை உதாரணமாகக் கொண்டு, பொறுப்புடன் செயற்படுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எதிர்காலத்தில் ஏற்படாது, மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர்.**

**முன்னாள் சுகாதார அமைச்சர் வெள்ளிக்கிழமை (2) கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக்குழு உறுப்பினர் டொக்டர் சம்மில் விஜேசிங்க, உடன் விளையாடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். மக்களின் வரிப்பணம், மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் தெரிவித்துள்ளார்.**

**சமூக அந்தஸ்து இல்லாமல், அவர்கள் சார்ந்தவர்கள் அல்லது அவர்களின் அரசியல் தொடர்புகள். நீதிமன்ற விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்ட ஒரு உண்மை என்னவென்றால், மனித இம்யூனோகுளோபுலின் ஊழலின் பின்னணியில் உள்ள மாஸ்டர் மைண்ட் அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்தது.**

**ரம்புக்வெல்ல விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், போதைப்பொருள் விவகாரத்தில் தொடர்புடையவர்கள் இன்னும் வெளிவரவில்லை என டாக்டர் விஜேசிங்க தெரிவித்தார். அவை சுகாதார அமைச்சகம், தேசிய மருந்து ஆணையம் (என்.எம்.ஆர்.ஏ) அல்லது வேறு எங்காவது உள்ளதா என்பது இன்னும் வெளிவரவில்லை, என்றார்.**

**மோசடியில் ஈடுபட்டவர்களை பாதுகாத்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் அதேவேளை அந்த தரப்பினர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் ஆட்சியாளர்களும், சட்ட அமைப்புகளும், அமைச்சரும் ஒரு உதாரணத்தை உருவாக்கி, எதிர்காலத்தில் இதுபோன்ற நிலை ஏற்படாமல் இருக்க, அதை ஒரு வாய்ப்பாக மாற்ற முயற்சிக்க வேண்டும்.**

**“இந்த அரசாங்கத்தின் நேர்மை கடுமையாக சோதிக்கப்பட்டுள்ளது, எனவே சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் அழுத்தத்தால் அரசாங்கம் தனது சொந்த அமைச்சரவை அமைச்சர் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து தனது நேர்மையை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது” என்று ஊடகக் குழு தெரிவித்துள்ளது உறுப்பினர் கவனித்தார்.**

**நீதிமன்ற விசாரணைகளின் போது குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களில் ஒன்று, அவசர கொள்வனவுகள் இடம்பெற்ற ஊழலுக்கு வழிவகுத்துள்ளதாக கலாநிதி விஜேசிங்க குறிப்பிட்டார். 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அவசரகால கொள்முதல் மூலம் அனைத்து சாதாரண கொள்முதல் நடைமுறைகளும் செயலிழந்தன. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் அவசரகால கொள்வனவுகள் ஆறு மாதங்களில் நிறுத்தப்படும் என ரம்புக்வெல்ல கூறியதாக அவர் குற்றம் சுமத்தினார். எவ்வாறாயினும், சுகாதார அமைச்சர் என்ற வகையில், ஜூன் மற்றும் 2023 இல் இதே கருத்தை அவர் கூறினார், சாதாரண கொள்முதல் நடைமுறைகள் தொடங்குவதற்கு இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் ஆகும் என்று குறிப்பிட்டார். அவசரகால கொள்வனவுகள் குறைந்த தரம் வாய்ந்த மருந்துப்பொருட்கள் நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கும், குடிமக்களிடமிருந்து வரியாக விதிக்கப்படும் பெருமளவிலான பொதுநிதியை வீணடிப்பதற்கும் மட்டுமே வழி வகுத்தது என்று GMOA ஊடகக்குழு உறுப்பினர் கூறினார். 2022 ஆம் ஆண்டில் மட்டும் 30 பில்லியன் ரூபாய் அவசரகால வாங்குதலுக்காக சுகாதார அமைச்சினால் செலவிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.**

# விமானம் மோதி ஊழியர் பலி



ஹாங்காங் விமான நிலையத்தில் பணியாற்றி வந்த ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் விமானம் மோதி உயிரிழந்தார்.

விமான நிலையத்தில் லொறியில் சென்றபோது தவறி கீழே விழுந்த அவர் மீது விமானம் ஒன்று மோதி, அவரை இழுத்துச் சென்றுள்ளது. படுகாயமடைந்த அந்த இளைஞர், டாக்சிக்கள் செல்லும் வழியில் கிடந்துள்ளதைப் பார்த்த அவரை, சக பணியாளர்கள் மீட்டனர். ஆனால், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக வைத்தியர்கள் அறிவித்தனர்.

சீன நாட்டில் விமான சேவைக்கான நிறுவனத்தில் பராமரிப்பு மற்றும் அடிமட்ட பணியாளராக அவர் வேலை செய்து வந்ததாக ஹாங்காங் விமான நிலைய கழகம் கூறியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக, 60 வயது சாரதியை பொலிஸார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# வானவில் நிற கம்மல் அணிந்த பெண்ணுக்குச் சிறைத்தண்டனை

தன்பாலின ஈர்ப்பாளர்கள், அதன் ஆதரவு செயல்பாடுகளுக்கு ரஷ்ய நாட்டு நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

தன்பாலின ஈர்ப்பாளர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் ரஷ்யா ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில், வானவில் நிறத்தில் கம்மல் அணிந்த பெண்ணுக்குச் சிறைத்தண்டனை



விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் நிஸ்னி நவ்ஹெராட் என்ற பகுதியைச் சேர்ந்த அனஸ்டசியா எர்ஷொவா, பொது இடத்தில் வானவில் நிறத்தில் கம்மல் அணிந்துள்ளார்.

இதையடுத்து அவரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அதில் அவருக்கு 5 நாட்கள் சிறைத்தண்டனை அளிக்கப்பட்ட நிலையில், மொசினாவுக்கு 1500 ரூபெல் அபராதம் விதிக்கப்பட்டது.

# அ.தி.மு.க முன்னாள் எம்.எல்.ஏ க்கள் பா.ஜ.க வில் இணைந்தனர்

இந்திய நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அ.தி.மு.க முன்னாள் எம்.எல்.ஏக்கள் 14 பேர் பா.ஜ.கவில் இணைந்தனர். டெல்லியில் உள்ள பா.ஜ.க தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியில் மத்திய இணை மந்திரிகள் மந்திரி ராஜீவ் சந்திரசேகர், எல்.முருகன் முன்னிலையில் அ.தி.மு.க முன்னாள் எம்.எல்.ஏக்கள் 14 பேர் பா.ஜ.க.வில் இணைந்துள்ளனர். அதேபோல், காங்கிரஸ் முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவரும் பா.ஜ.க.வில் இணைந்துள்ளார்.

பா.ஜ.கவில் இணைந்த அ.தி.மு.க முன்னாள் எம்.எல்.ஏக்கள் சிலரின் விபரம்:-ஆர்.துரைசாமிகு, வடிவேல்கந்தசாமி கோமதி, சீனிவாசன், ஆர்.சின்னசாமி, எம்.வி.ரத்தினம், இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு




பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை, வானதி சீனிவாசன், பொன்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இவர்கள் அனைவரும் அரசியலில் இருந்து ஒதுங்கியவர்கள்.

# இம்ரான் கானின் மனைவி வழக்கு தாக்கல்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், பல்வேறு ஊழல் வழக்குகளில் கைதாகி அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஊழல் வழக்குகளில் அவருடைய மனைவி புஷ்கர் பீவிக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறி அவருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இஸ்லாமாபாத்தில் உள்ள அவருடைய வீட்டில் புஷ்ரா பீவி அடைக்கப்பட்டார். இந்த நிலையில் இம்ரான் கான் - புஷ்ரா பீவிக்கு சொந்தமான அவர்களுடைய வீட்டை கிளைச் சிறையாக மாற்றப்போவதாக சிறைத்துறை நிர்வாகம் அறிவித்தது.

இதனை எதிர்த்து புஷ்ரா பீவி இஸ்லாமாபாத் கோர்ட்டில் மனுத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், ஊழல் வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களைப்போல் தானும் அடியாலா சிறையிலேயே தன்னுடைய சிறைத்தண்டனையை அனுபவிக்க விரும்புவதாகக் கூறியுள்ளார். இதனால் தன் வீட்டை



கிளைச்சிறையாக மாற்றும் முடிவுக்கு கோர்ட்டு தடை விதிக்க வேண்டும் என்றுள்ளார்.

மேலும் வீட்டின் வளாகத்தை சுற்றி அடையாளம் தெரியாத நபர்கள் சுற்றி வருவதாகவும் இதனால் பாதுகாப்பற்ற நிலையை தான் உணருவதாகவும் புஷ்ரா பீவி தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றத்திற்கு செல்ல கெஹெலிய மறுப்பு



முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல வுக்கு இன்று (07) நடைபெ றும் பாராளுமன்றத்தின் புதிய அமர்வில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங் கப்பட்டுள்ள நிலையில் இன்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள கெஹெலிய ரம்புக்வெல்ல மறுப்புத் தெரிவித்துள் ளார்.

அமைச்சுப் பதவி இல் லாத காரணத்தினால் கெஹெலிய ரம்புக்வெல்ல வுக்கு பாராளுமன்ற அமர் வில் பின்வரிசை ஆசனம் ஒன்றும் ஒதுக்கப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

# பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒத்திவைப்பு



சுகாதாரசேவை தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு நிதி அமைச்சின் செயலாள ருடன் நடத்திய கலந்துரை யாடல் நேற்று (06) பிற்ப கல் நிறைவடைந்ததைய டுத்து ஒரு வாரத்துக்கு போராட்டம் ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

சுகாதாரசேவை தொழிற் சங்கக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட பிரே ரணை தொடர்பில் கலந்து ரையாடுவதற்கு நிதி அமைச் சின் அதிகாரிகள், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் நிபுணர்களின் பங் களிப்புடன் குழு ஒன்று நிய மிக்கப்பட்டுள்ளது. வாரத் தில் நிலையான பதில் வழங் குவதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை கருத்திற்கொண்ட சுகா தார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நாளை (07) முதல் முன்னெடுக்கப்பட விருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை மேலும் ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்க தீர்மானித்ததாக அதன் அழைப்பாளர் சானக தர்ம விக்ரம தெரிவித்தார்.

# 50 பேக்கரிகள் மீது வழக்குத் தாக்கல்



பாணின் நிர்ணயிக்கப் பட்ட எடைக்கான வர்த்த மானி வெளியிடப்பட்டதை அடுத்து, நுகர்வோர் விவ கார அதிகாரசபை அதற் கான சோதனைகளை ஆரம் பித்துள்ளது.

பேக்கரிகள் மற்றும் கடை களில் நடத்தப்பட்ட சோத னைகளின் போது, நிர்ண யிக்கப்பட்ட எடை மற்றும் விலையை காட்டாத சுமார் 50 பேக்கரிகள் மீது சோதனை நடத்தப்பட்டு, அந்த பேக்கரிகளுக்கு எதி ராக வழக்கு தொடரப்ப டும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

# மட்டக்களப்பில் ஜோதிர்லிங்க அருங்காட்சியகம்



இந்தியாவின் புகழ் பெற்ற 12 சிவாலயங்களிலி ருந்து பெறப்பட்ட சிவலிங் கங்கள் மற்றும் 16 அடி உயரம் கொண்ட சிவலிங்க தியான மண்டபம் என பல்வேறு அம்சங்கள் கொண்ட ஜோதிர்லிங்க அருங்காட்சியகம் மட்டக் களப்பு, கொக்கட்டிச்சோ லையில் திறந்து வைக்கப் பட்டது.

பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையத்தினால் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கலைக்கூடத் தின் நினைவுபடிகம் திரை நீக்கம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்ட தனைத் தொடர்ந்து சிவ லிங்க தோற்றத்தில் 16 அடி உயரத்தில் அமைக் கப்பட்ட தியான மண்ட பம் திறந்து வைக்கப்பட்ட தோடு இந்தியாவிலிருந்து வரலாற்று புகழ்பெற்ற 12 சிவாலயங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட ஜோதிர்லிங்க கலைக்கூட மும் திறந்து வைக்கப்பட் டது.

# சிறைக்கைதிகள் மோதலில் ஒருவர் மரணம்

திருகோணமலை சிறைச் சாலையில் இரு கைதிக ளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதியான கிண்ணியா மஹ்ரூப் நக ரைச் சேர்ந்த மொஹமட் அலி உவைஸ் முகம்மது உபயத்துல்லா ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை (06) உயிரிழந்துள்ளதாக திருகோணமலை துறை முக பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

கடந்த 2 ஆம் திகதி திரு கோணமலை சிறைச்சாலை யில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதுடன், தலையில் காயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

# முன்னாள் கடற்படைத் தளபதி சஜித்துடன் இணைந்தார்

இலங்கை கடற்படை யின் முன்னாள் தளபதி தயா சண்டகிரி இன்று சஜித் பிரேமதாசவின் முன்னிலையில் மக்கள் ஐக்கிய சக்தியில் இணைந் தார்.

கட்சியின் ஆலோசக ராக தயா சண்டகிரி நிய மிக்கப்பட்டுள்ளார்.

# இந்தியாவை விட்டு வெளியேறிய இங்கிலாந்து அணி





இந்தியாவில் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து பங்கேற்று விளையாடி வருகிறது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக இத்தொடரானது நடைபெற உள்ளதால் இரண்டு அணிகளுக்குமே இது முக்கியத்துவம் வாய்ந்த தொடராக பார்க்கப்படுகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகள் முடிவடைந்த வேளையில் இரு அணிகளுமே தலா ஒரு வெற்றியை பெற்று இந்தத் தொடரில் ஒன்றுக்கு ஒன்று (1-1) என்ற கணக்கில் சமநிலை வகிக்கின்றன.

மூன்றாவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி 15 ஆம் திகதி ராஜ்கோட் நகரில் நடைபெற இருக்கிறது. இந்நிலையில் இந்தத் தொடரின் முதல் இரண்டு போட்டிகள் மட்டுமே முடிவடைந்த வேளையில் தற்போது இங்கிலாந்து அணி இந்தியாவிலிருந்து புறப்பட்டு அபுதாபிக்குச் சென்றுள்ளது.

கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு பின்னர் அடுத்த மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கு பத்து நாட்கள் இடைவெளி இருப்பதால் அவர்கள் அபுதாபிக்கு சென்று பயிற்சி முகாமில் பங்கேற்க இருக்கின்றனர். அங்கு பயிற்சி மற்றும் புத்துணர்ச்சி வகுப்புகளில் அவர்கள் பங்கேற்க உள்ளதாக கூறப்படுகிறது. அபுதாபியில் பயிற்சி முகாம் முடிவடைந்த பிறகு மீண்டும் இந்தியாவிற்கு திரும்பும் இங்கிலாந்து அணி எஞ்சியுள்ள 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது. ஏற்கெனவே இந்த இந்திய தொடருக்கு கிளம்புவதற்கு முன்னதாக இங்கிலாந்து வீரர்கள் அபுதாபி சென்று பயிற்சி செய்தனர்.

# 58 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தவருக்கு கிராண்ட்மாஸ்டர் பட்டம்

மறைந்த செஸ் வீரர் மிர் சுல்தான் கான் பாகிஸ்தானின் முதல் கிராண்ட்மாஸ்டர் என்ற பட்டத்தை வென்றுள்ளார். அவர் இறந்து 58 ஆண்டுகளுக்கு பிறகு அவருக்கு இப்பட்டத்தை உலக செஸ் கூட்டமைப்பு வழங்கியுள்ளது. மிர் சுல்தான் 1929, 1931 மற்றும் 1931 ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஸ் செஸ் சாம்பியன்ஷிப்பை வென்றிருந்தார். அதேபோல், ஃபிராங்க் மார்ஷல் மற்றும் சவில் டார்டகோவர் மற்றும் முன்னாள் உலக சாம்பியனான ஜோஸ் ரவுல் கபாப்லாங்கா போன்ற ஜாம்பவான்களை வென்றுள்ளார்.

மிர் சுல்தான் கான் அப்போது பிரிக்கப்படாத இந்தியா - பாகிஸ்தானில் ஆசியாவின் தலைசிறந்த செஸ் வீரராக திகழ்ந்தார். இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்கு முன் இந்தியாவுக்கு விளையாடியிருந்தாலும், இப்போது 2024 இல் அவருக்கு பட்டம் வழங்கப்பட்டுள்ளதால், பாகிஸ்தானின் முதல் கிராண்ட்மாஸ்டர் என்ற பெருமையை பெற்றார்.

மிர் சுல்தான் கான் 1903 ஆம் ஆண்டு பஞ்சாபின் குஷாப் மாவட்டத்தில் உள்ள மீத்தா திவானாவில் பிறந்தார். இந்த இடம் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு எல்லைக்கு உட்பட்டது. மிர் சுல் தான் நிலப்பிரபுக்களின் குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதில் இருந்தே செஸ் விளையாட்டில் ஆர்வம் இருந்ததாக கூறப்படுகிறது. சிறு வயதில் அவர் தனது சகோதரர்களுடன் சதுரங்கம் விளையாடியதாகவும், அதேசமயம் இந்த விளையாட்டின் நுணுக்கங்களை அவரது தந்தை மியான் நிஜாம் தீன் கற்றுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது. இந்த குழந்தை பருவ ஆர்வமும், அர்ப்பணிப்பும் தான் மிர் சுல் தானை பாகிஸ்தானின் முதல் கிராண்ட் மாஸ்டர் ஆக்கியது.

சிறு வயதிலேயே செஸ்ஸில் மிர் சுல்தான் சிறப்பாக விளையாடியதை பார்த்து, பணக்கார நில உரிமையாளர் சர் உமர் திவானா மிகவும் ஈர்க்கப்பட்டார். பயிற்சியின் போது, 1928 இல் நடந்த 'அகில இந்திய செஸ் சாம்பியன்ஷிப்' போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி பெற்றார். அடுத்த ஆண்டே, சர் உமர் திவானின் உதவியால், மிர் சுல்தான் நேராக லண்டனுக்கு அழைத்துச் சென்று இம்பீரியல் செஸ் கிளப்பில் உறுப்பினராக்கினார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற பிரிட்டிஷ் செஸ் சாம்பியன்ஷிப்பிலும் மிர் சுல்தான் வென்றார். இந்த வரலாற்று வெற்றிக்குப் பிறகு, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவில் இருந்து விளையாட அழைப்பு வந்தது. 1930 ஆம் ஆண்டு மிர் சுல்தான் ஐரோப்பா செல்வதற்கு முன், அவர் இந்தியாவுக்கு வர முடிவு செய்தார். அதன் பிறகு அவர் ஐரோப்பா சென்றார். ஐரோப்பாவில் நடந்த பல போட்டிகளில் பங்கேற்றார். அதே நேரத்தில், 1930



ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் நடந்த 11 ஆவது ஹேஸ்டிங்ஸ் கிறிஸ்துமஸ் செஸ் விழாவில் அவர் தனது மிகப்பெரிய போட்டியாளரும், அக்கால சாம்பியனுமான ஜோஸ் ரவுல் கேபப்லாங்காவை தோற்கடித்தார்.

மிர் சுல் தான் 1940 ஆம் ஆண்டு வரை செஸ் விளையாடியதாக நம்பப்படுகிறது. இதன் பிறகு பிரிட்டனில் இருந்து வந்த பிறகு மும்பையிலும் ஒரு போட்டி நடந்தது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, மிர் பாகிஸ்தானில் தங்க முடிவு செய்து, தனது மனைவி மற்றும் மகன்களுடன் பாகிஸ்தானில் வசித்து வந்தார். மிர் 1966 ஆம் ஆண்டு 'கசநோய்' காரணமாக உயிரிழந்தார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 07.02.2024 அன்று வெளியிடப்பட்டது.